# World Christian Fellowship

www.wcflondon.com
wcflondon@gmail.com

## ***நான்குவிதமான ஊழியர்கள்***

*வேதாகமத்தின் முதல் புத்தகம் யோபுவினால் எழுதப்பட்டது. இதை அவர் மோசே எழுதிய ஆதியாகமத்திற்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதிவிட்டார். இவ்வளவு தொன்மையான யோபிவினுடைய புத்தகம், இந்த நவீன கிறிஸ்தவ உலகத்தில் உள்ள ஊழியர்களைக்குறித்து ஒரு தெளிவான புரிதலை நமக்கு வெளிக்காட்டுகிறது.*

*அப்படியானால் இந்த ஊழியர்களிடம் என்னதான் குறை உள்ளது?*

*ஆண்டவர் ஒருவருக்கு அளித்த ஆசிர்வாதத்தை அவர்களிடமுள்ள **'செல்வத்தையும் ஆரோக்கியத்தையும்'** வைத்தே ஆதாரமாகக் காண்பிக்கின்றனர்.*

*அது முற்றிலும் தவறானது!!*

*நான்கு **ஊழியர்கள்***

- ***எலிப்பாஸ்,***
- ***பில்தாத்,***
- ***சோப்பார் மற்றும்***
- ***எலிகூ***

*எலிப்பாச், பில்தாத் மற்றும் சோப்பார் ஆகிய மூன்று போதகர்களும்தான் யோபுவினடத்தில் முதலில் வந்து அவனுடைய 'செல்வம் மற்றும் ஆரோக்கியத்தின்' இழப்பே தேவன் அவனிடத்தில் பிரியமாக இல்லை என்பதை மெய்பிப்பதாகக்கூறி பிரசங்கம் செய்தனர். <u>அதுதவிர</u> யோபு தன் வாழ்வின்மீதிருந்த தேவ ஆசிர்வதங்களை இழந்துவிட்டதாகக் கூறினார்கள்.*

*<u>அப்படியானால்</u> அவர்களின் பிரசங்கத்தின் அடிப்படை என்ன?*

*அடித்தளமான பிரசங்கம் என்னவென்றால் தேவனின் ஆசீர்வாதம் எப்பொழுதும்* ***'செல்வத்தையும் ஆரோக்கியத்தையுமே'*** *அளிக்கும் அதாவது* ***'செழிப்பைக் குறித்த நற்செய்தி'*** *என்பார்கள்.*

*வேதாகமம் யோபுவைக் குறித்து என்ன கூறுகிறது?*

***யாக்கோபு 5:10,11***, *[10] என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். [11] இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான் களென்கிறோமே* ***யோபின் பொறுமையைக் குறித்துக்*** *கேள்விப் பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறாரே.*

*அதேசமயம் செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் குறித்து பிரசங்கித்த இந்த மூன்று பிரசிங்கியார்களும் ஆண்டவரின் சித்தத்திற்குள் இல்லாமல் மாறாக குற்றம் சாட்டுபவனாகிய சாத்தானுடன் கூட்டுறவு கொண்டு யோபுவை குற்றம் சாட்டினார்கள்.*

*ஆண்டவர் அந்த மூன்று பிரசங்கியார்களிடம் என்ன கூறினார்?*

***யோபு 42:7***, *கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடே பேசினபின், கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி :உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர்மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது;*

*என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை.*

யோபுவிடம் தன்னைக் குறித்துத் தவறாக அறிவித்தற்காக (அல்லது திரித்துரைத்ததற்காக) தேவன் அவர்கள் மீது கோவம் கொண்டு கடிந்து கொண்டார்.

இன்றும்கூட ஆண்டவர் அதேபோலத்தான் செழிப்பைக் குறித்து உபதேசிப்பவர்களிடம் நடந்துகொள்வர் என்பதை நீங்களும் என்னுடன் ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா?

***ஏன்?***

ஏனெனில் அதே காரணத்திற்காகத்தான்.

அவர்கள் முற்றிலும் தவறானவர்களா?

இல்லை! அவர்கள் பல நல்ல கருத்துக்களையும் கூறினார்கள் அவற்றை யோபுவினுடைய புத்தகத்திலிருந்து நீங்கள் வாசித்து அறிந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் தங்களுடைய முழு உபதேசத்தையும் ஒருவனிடம் இருக்கும் பணமும் உடல் சுகமுமே தேவன் தன்மீது

*கொண்ட ஒப்புதலுக்கான ஆதாரம் என்பதாயிருந்தது.*

## ***1. எலிப்பாஸ்***

***தரிசனமும் தேவதூதர்களும்:***

**யோபு** *4:12-17, [12]இப்போதும் ஒருவார்த்தை
என்னிடத்தில் இரகசியமாய் அறிவிக்கப்பட்டது,
அதினுடைய மெல்லிய ஓசை என் செவியில்
விழுந்தது.[13]மனுஷர்மேல் அயர்ந்த நித்திரை
இறங்குகையில், இராத்தரிசனங்களில் பலவித
தோற்றங்கள் உண்டாகும்போது, [14]திகிலும்
நடுக்கமும் என்னைப்பிடித்தது, என்
எலும்புகளெல்லாம் நடுங்கினது. [15]அப்பொழுது
ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாகக் கடந்தது, என்
உடலின் மயிர் சிலிர்த்தது. [16]அது ஒரு உருப்போல
என் கண்களுக்குமுன் நின்றது, ஆனாலும் அதின்
ரூபம் இன்னதென்று விளங்கவில்லை;
அமைதலுண்டாயிற்று, அப்பொழுது நான் கேட்ட
சத்தமாவது: [17]மனுஷன் தேவனைப்பார்க்கிலும்
நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை
உண்டாக்கினவரைப்பார்க்கிலும்
சுத்தமாயிருப்பானோ?*

*எத்தனை முறை நாம் இது போன்ற அறிக்கைகளை கேட்டிருக்கிறோம்:*

- *நான் ஒரு தரிசனம் கண்டேன்*
- *ஆவியானவர் என்னை எடுத்துச்சென்றார்*
- *ஆவியானவர் என்னுடன் பேசினார்*
- *தேவதூதர் என்னை சந்தித்தார்*
- *தேவதூதர் உணவு கேட்டார்*
- *நான் குளிக்கும்போது தேவதூதர் என்னை சந்தித்தார்*
- *பரலோகத்தையும் சொர்கத்தையும் குறித்த தரிசனம்*

*அப்பொழுது யார் எலிப்பாச்சுடன் பேசியது?*

*பிசாசானவன் அவனை வஞ்சித்தான்.*

***2 கொரிந்தியர் 11:14**, அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.*

*அதனால் தயவு செய்து நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள், சிலர் உங்களை ஈர்க்க வேண்டுமென்று தேவதூதர்களைக் குறித்த தரிசனம்*

*அல்லது சில வகையான தரிசனங்களைச் சொல்லி, தேவனின் வார்த்தையின் மீது தாங்கள் அதிகாரம் கொண்டிருப்பதாக உங்களை உணரவைப்பார்கள் ஆனால் நீங்கள் அவர்களிடம் எமாறாதிருங்கள்..*

*பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் யாரையும் பயமுறுத்தமாட்டார்!*

*பரிசுத்த ஆவியானவர் தங்கள் மீது வரும்போது அவர்களுடைய குரலும் முகமும் மாறும் என்றுகூறி ஏமாற்றுகிறவர்களுமுண்டு .*

***2. பில்தாத்***

***பாரம்பரியத்தை பின்பற்றுதல்***

***யோபு 8:8-10**, ஆகையால், நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து, அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்துபாரும்.*
*[9]நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்; பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது. [10]அவர்கள் உமக்கு உபதேசித்து, உமக்குத் தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்கள் அல்லவோ?*

*இந்த இரண்டாம் வகையான உபதேசகர்கள் தேவனின் வார்த்தையைக் காட்டிலும் தங்களுடைய முந்தைய தலைமுறையின் பாரம்பரியத்தையே பின்பற்றுவார்கள். முந்தைய தலைமுறையினர் தங்களிடம் ஒப்படைத்த பாரம்பரியத்தில் எந்த ஒரு மாற்றமும் செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை.*

*பல நூற்றாண்டுகளுக்குமுன் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சில வகையான பாரம்பரியங்களை சரியோ தவரோ இரண்டில் எதுவாயினும் அதை அப்படியே கடைப்பிடிக்கின்ற ஒருசில சபைகளும் போதகர்களும் உண்டு.*

*அவர்களுக்கு எந்த ஒரு தரிசனமும் கனவும் இல்லை*

*அவர்களுக்குள் எந்த மாற்றங்களும் தேவையில்லை.*

*உலகத்தில் உள்ள பெரிய நிறுவனங்களிலும் இதே நிலைமை தான்! என்னுடைய அனுபவத்தில் இதை நான் பெரிய நிறுவனங்களில் கண்டுருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் கூட, மக்கள் யாவரும் மாற்றத்தை விரும்புவதில்லை. பெரிய நிறுவனங்களிலும் கூட மாற்றத்த்தை கையாளுவதே இருக்கும் சவால்களுக்குள் ஒரு*

*பெரிய சவாலாகவும் போராட்டமாகவும் இருக்கிறது. சபைகளுக்கும் இந்த விஷயத்தில் வித்தியாசங்கள் ஏதுமில்லை .*

*இதை எளிமையாக கூற வேண்டும்மென்றால், அவர்களுக்கு அந்த ஸ்திரமான நிலையை குழப்ப விருப்பமில்லை.*

*இயேசு* ***மாற்கு*** *7:13, "நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள் இதுபோலவே நீங்கள் .மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள்" என்று சொன்னார்.*

*அதனால் உங்களுடைய பாரம்பரியங்களை வெறுமனே பற்றிக்கொள்வதன் மூலம் நீங்கள் தேவவார்த்தையை பலனில்லாமல் செய்துவிடலாம்.*

*பில்தாத் மிகவும் கனிவானவன் ஆனாலும் அவன் இன்னும் யோபுவை பிழை கூறிக்கொண்டிருந்தான். உங்களை மிகவும் மென்மையான முறையில் புண்படுத்தவும் மற்றும் குற்றம்சாட்டும் மனிதர்களும் இங்கு உள்ளனர்!!*

*அவர்களுடைய வார்த்தை மிகவும் மென்மையானதாக இருக்கும் ஆனால் எப்பொழுது அவர்கள் பேசும்போதும் நச்சுத்தன்மையுடைய பலமான சொற்களாய் இருக்கும். கணவனும் மனைவியும் சில வேளைகளில் ஒருவருக்கொருவர் அமைதியான வார்த்தைகளை சொல்லமுடியும் அது ஆத்திரமும் சத்தமும் உடைய வார்த்தைகளைக்காட்டிலும் மிகுதியாக புண்படுத்தும்.*

### *3. சோப்பார்*

**கோவமும் விமர்சனமும்**

***யோபு 11:1-6 & 11-12,*** *[1] அப்பொழுது நாகமாத்தியனாகிய சோப்பார் பிரதியுத்தரமாக:*
*[2] ஏராளமான வார்த்தைகளுக்கு உத்தரவு சொல்லவேண்டாமோ? வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவானோ? [3] உம்முடைய வீம்பு வார்த்தைகளுக்கு மனுஷர் மவுனமாயிருப்பார்களோ? நீர் பரியாசம் பண்ணும்போது, ஒருவரும் உம்மை வெட்கப்படுத்தவேண்டாமோ? [4] என் சொல் சுத்தம் என்றும், நான் தேவரீருடைய பார்வைக்குத் துப்புரவானவன் என்றும் நீர் சொல்லுகிறீர்.*
*[5] ஆனாலும் தேவன் பேசி, உமக்கு விரோதமாய்த்*

*தம்முடைய உதடுகளைத் திறந்து, [6] உமக்கு ஞானத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினால் நலமாயிருக்கும்; உள்ளபடி பார்த்தால், அது இரட்டிப்புள்ளதாயிருக்கிறது; ஆகையால் உம்முடைய அக்கிரமத்திற்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்கவில்லையென்று அறிந்துகொள்ளும் . [11] மனுஷருடைய மாயத்தை அவர் அறிவார்; அக்கிரமத்தை அவர் கண்டும், அதைக் கவனியாதிருப்பாரோ? [12] புத்தியில்லாத மனுஷன் காட்டுக்கழுதைக்குட்டிக்கு ஒப்பாகப் பிறந்திருந்தாலும், பெருநெஞ்சுள்ளவனாயிருக்கிறான்.*

*இதுபோன்ற பிரசங்கியார்கள் மிகுந்த கோவமும் மேலும் எல்லாவற்றைபற்றியும் குறை காண்கிறவர்களாய் இருகின்றனர். இந்த நான்கு பிரசங்கியார்களுக்குள்ளே சோப்பார் தான் கடினமாகத் தாக்குபவர் மேலும் அவரே மிகவும் கடினமாகத் தாக்கினார்.*

*சிலர் தங்களை பழைய ஏற்ப்பாட்டிலுள்ள எலியாவின் ஊழியமும் மேலும் புதிய ஏற்ப்பாட்டிலுள்ள யோவான் ஸ்நானகனின் ஊழியமும் செய்ய அழைக்கப்பட்டதாகக் கூறிக்கொள்ளும் மக்களும் உள்ளனர். இவர்கள் தங்களை சுயமாய் நியமித்துக்கொள்வர்!!*

*<u>ஆம்</u> மெய்யாகவே இந்த அலுவலுக்காக அவர்களே அவர்களை நியமித்துக்கொள்வர்.*

*இயேசு மதத்தலைவர்களில் முக்கியமாக பரிசேயர்களையே குற்றம் சாட்டினார். ஆனால் அதை தேவனால் வழிநடத்தப்பட்டு கடிந்து கொண்டார். அவருடைய விமர்சனம் நிலைவரமான ஆவியினில் இருந்ததால் அவர்கள் மீண்டும் மனந்திரும்ப வழிநடத்தியது, தேவன் இதற்க்கு சாட்சியாய் இருந்தார். இயேசு அவர்களை 'விரியன்பாம்புக்குட்டிகளே' என்று அழைத்தார். அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை 'நீதிக்கெல்லாம் பகைஞனே' என்று அழைத்தார்.*

*<u>அப்படி</u> என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது?*

*தங்கள் வாழ்வின் மீதுள்ள அபிஷேகம்.*

*இங்கே சோப்பார், தன்னைத் தானே நியமித்துக்கொண்ட உபதேசகன் தேவனின் நீதிக்காகத் தான் முற்றிலும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அறிவித்தான். ஆனால் தேவ அபிஷேகமானது முற்றிலும் காணப்படாமல் இருந்தது.*

## *4. எலிகூ*

## ***இளவயதுள்ளவனும் அனுபவமில்லாதவனும்***

***யோபு 32:5-7 & 18-22,*** [5]*அந்த மூன்று மனுஷரின்*
*வாயிலும் மறுஉத்தரவு பிறக்கவில்லையென்று*
*எலிகூ கண்டபோது, அவனுக்கு கோபம் மூண்டது.*
[6]*ஆதலால் பரகெயேலின் குமாரன் எலிகூ என்னும்*
*பூசியன் பிரதியுத்தரமாக நான் :இளவயதுள்ளவன்,*
*நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி,*
*என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக*
*வெளிப்படுத்தப் பயந்திருந்தேன்.* [7]*முதியோர்*
*பேசட்டும், வயதுசென்றவர்கள் ஞானத்தை*
*அறிவிக்கட்டும் என்றிருந்தேன்.*

[18]*வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது; என்*
*உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது.*
[19]*இதோ, என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து, புதுத்*
*துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புது*
*ரசத்தைப்போலிருக்கிறது.* [20]*நான்*
*ஆறுதலடையும்படி பேசுவேன்; என் உதடுகளைத்*
*திறந்து பிரதியுத்தரம் சொல்லுவேன்.* [21]*நான்*
*ஒருவனுடைய முகத்தைப் பாராமலும், ஒரு*
*மனுஷனுக்கும் இச்சகம் பேசாமலும்*
*இருப்பேனாக.* [22]*நான் இச்சகம் பேச அறியேன்;*

*பேசினால் என்னை உண்டாக்கினவர் சீக்கிரமாய் என்னை எடுத்துக்கொள்வார்.*

*எலிகூ மிகவும் இளமையானவன் அதனால் முற்றிலும் அனுபவம் இல்லாமலும் அல்லது வேதனை அற்றவனாயும் அல்லது துக்கம் அறியதவனாயும் இருந்தான்.*

*தேவன் அவனுடன் கோவம் கொள்ளவில்லை ஏன்னென்றால் அவன் ஆவியில் தீங்கு இல்லாதவனாய் இருந்தான் ஆனாலும் அவன் இன்னும் அனுபவமில்லாதவனாய் இருந்தான்.*

*இதை போன்ற பிரசிங்கியார்கள் அருமையான சத்தியங்களை கற்றுத்தருவார்கள் ஆனால் அவர்கள் ஒருபோதும் தேவனின் வார்த்தையைத் தங்கள் வாழ்வில் பயன்படுத்தியதில்லை. மேலும் அவர்களுக்கு என்றும் வாழ்வில் பாடுகளுக்குள் சென்ற அனுபவமில்லை.*

*இது போன்ற போதகர்களை இந்த நவீன யுகத்தில் நான் பார்க்கிறேன், அவர்கள் பெரிய போதகர்கள் அல்லது தலைவர்களின் பிள்ளைகளாய் இருக்கின்றனர். வெறும் இந்த குடும்பங்களைச் சார்ந்ததினால் அவர்கள் இந்த உயர்வான நிலையில் உள்ளனர். சில சமயங்களில் அவர்கள்*

*ஆண்டவருக்காக வைராக்கியமாய் இருக்ககூடும் ஆனால் பெரும்பாலான சமயங்களில் அவர்கள் வெறும் அந்த குடும்பங்களில் பிறந்ததினால் அங்கே இருக்கிறார்கள்.*

*இந்த இளம் குழந்தைகள் ஒருவரின் வாழ்க்கைக்கு தொடர்பான விஷயங்களில் அனுபவம் இல்லாதவர்களானாலும் அவர்கள் மற்றவர்களுக்கு அறிவுரையும் ஆலோசனையும் கொடுக்க ஆயத்தமாய் உள்ளனர்.*

*அபோஸ்தலனாகிய பவுலின் வாழ்கையைப் பாருங்கள், நற்செய்தியின் நிமித்தம் அவர் எவ்வளவு அதிகம் துன்புன்புற்றிருக்கிறார்.*

***2 கொரிந்தியர் 1:3-8,*** *[3]நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். [4]தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். [5]எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில்*

பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. [6]ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது. [7]நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.
[8]ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.

இது போன்ற ஊழியம் வேதனைக்குள்ளிருந்து பிறந்தது! இவ்வகை ஊழியம் நவீன கால போதகர்களைக்காட்டிலும் முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. இத்தகைய ஊழியம் துன்பத்தின்மூலம் தேவ மகிமைக்கேன வடிவமைக்கப்பட்டது.

***முடிவுரை:***

*யோபு அவர்களில் ஒருவரிடமும் ஏமாறாமல் மேலும் அவனால் இந்த நான்கு வகையான பிரசங்கியார்களை மேற்கொள்ள முடிந்தவனாயும் இவர்கள் செழிப்பையும் ஆரோக்கியத்தையும் பற்றி பிரசங்கத்ததுடன்,*

***தரிசனமும் தேவதூதர்களும்,***

***பாரம்பரியத்தை பின்பற்றுதல்,***

***கோவமும் விமர்சனமும் மற்றும்***

***இளவயதுள்ளவனும் அனுபவமில்லாதவனுமாய்***

*இன்று உங்கள் கைகளில் வேதாகமம் இருப்பது போல யோபுவிடம் இருக்க இல்லை.*

*இயேசு நம்மை எச்சரித்து* ***மத்தேயு*** ***7:15,*** *"கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு*

*உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்”.*

*அபோஸ்தலனாகிய பவுல்* **ரோமர் *16:17-20***, *அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 18. அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். 19. உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். 20. சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென்’ என்று நம்மை எச்சரித்தார்*

*அபோஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய நிருபத்தில், 2* **பேதுரு** *2:1, 'கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்' என்று எச்சரிக்கை செய்தார்*

*பேதுருவின் தெளிவான அறிக்கை நமக்கு சபைகள் காக்கப்படவேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சபையின் வாசல் வழியாக வரும் நல்ல மனிதர்களில், சிலர் நன்மையைவிட கூடுதலான தீமையே செய்வார்களாய்யிருக்கும் விமர்சகர்களால் சபைகலிலுள்ள போலித்தனம் மற்றும் முரண்பாடுகளை எப்பொழுதும் சுட்டிக்காட்டக்கூடியவர்களாய் உள்ளனர். அவர்கள் அதை எப்பொழுதும் செய்திருக்கிறார்கள், மேலும் அவர்கள் எப்பொழுதும் செய்துகொண்டே தான் இருப்பார்கள்.*

*பேதுரு அடிப்படையில் நம்மிடம் சொல்கிறது, "நிச்சயமாக போலியான கிறித்தவர்கள் இருக்கிறார்கள். சபைகக்கு நன்மை*

*செய்வதைக்காட்டிலும் கூடுதலான கெடுதல் செய்யும் பிரசங்கியார்ளும் <u>நிச்சயமாக</u> உண்டு.*

*வேறு என்ன இந்த பாவம் நிறைந்த உலகத்திலிருந்து நீங்கள் எதிர்ப்பார்ப்பீர்கள்?*

*உயர வளரு! அப்பாவியாய் இராதே ! வெறுமனே நீங்கள் போலியானவையைக் கண்ட காரணத்தினால் <u>மெய்</u>யென்னவென்பதை தவறவிடாதீர்கள்".*